# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை 2025.08.20

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஆவணி மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் அவர்களின் தலைமையில் 2025.08.20ம் திகதி புதன்கிழமை காலை 09.30 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் ஒரு நிமிட மௌன வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளையில் கீழ்காணும் கௌரவ உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் ஆகியோர் சமூகமாகியிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா
2. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா
3. கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன்
4. கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ்
5. கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா
6. கௌரவ உறுப்பினர் வயிரவன் தங்கவேல்
7. கௌரவ உறுப்பினர் வித்தியா கிருபாகரன்
8. கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
9. கௌரவ உறுப்பினர் குலத்துங்கம் வில்வராசா
10. கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன்
11. கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன்
12. கௌரவ உறுப்பினர் பாலச்சந்திரன் லஜிதரன்
13. கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன்
14. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார்
15. கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன்
16. கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் இராசேந்திரம்
17. கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி
18. கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மதூசன்
19. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
20. கௌரவ உறுப்பினர் சந்திரன் தயானி
21. கௌரவ உறுப்பினர் இரத்தினம் அனுஷா
22. கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர்
23. கௌரவ உறுப்பினர் ஜெகதீஸ்வரி சுதர்சன்
24. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன்
25. கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ்
26. கௌரவ உறுப்பினர் சுகீர்த்தனா ரவிச்சந்திரன்
27. கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ்
28. கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன்
29. கௌரவ உறுப்பினர் மேகலா திருஞானசம்பந்தர்

- கௌரவ தவிசாளர் தனது தலைமையுரையிலே இன்றைய சபையின் அமர்வுக்கு வருகை தந்துள்ள சபையினுடைய கௌரவ உப தவிசாளர் மற்றும் சபையின் கௌரவ உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் காலை நேர வணக்கத்தினை தெரிவித்து இக்கூட்டமானது சபையின் மூன்றாவது கூட்டமெனவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் சபையினுடைய செயற்பாடுகளில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அமைச்சினூடாக மீள்குடியேற்ற வீதிகளுக்காக கிடைக்கப்பெற்ற 182 மில்லியனுக்கு மதிப்பீடு செய்து அனுப்பி இருந்தோம் தற்போது மாவட்ட செயலகத்தால் 31 மில்லியனுக்குரிய 18 வீதிகள் கேள்வி கோரல்கள் கோரப்பட்டுள்ளது. அதே போல் ஏனைய வீதிகளுக்குரிய மதிப்பீடுகளும் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. மற்றும் சபையினுடைய வரவு செலவுத்திட்ட நிதியினூடாகவும் வேலைகள் தற்போதைய பெறுகை நடைமுறைக்கமைய பத்திரிகையில் பிரசுரித்து கேள்விகோரல் மூலம் செய்யப்படும் எனவும் எதிர்வரும் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட

வேண்டிய வேலைத்திட்டங்களை தருமாறு சென்ற கூட்டத்தில் கோரப்பட்டது அதனையும் விரைவில் சமர்ப்பிக்குமாறும் மேலும் தங்களுடைய வட்டாரத்தில் வசிக்கின்ற மலசலகூடம் தேவைப்படுகின்ற குடியிருப்பாளர்களின் விபரங்களையும் தந்தால் நிலைபேறான அபிவிருத்தித்திட்டத்தினூடாக செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

- இன்றைய அமர்வுக்கு எமது சபையின் கௌரவ உறுப்பினர்களான முத்தலிப் ரகுநாதன், சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன், சிவசுப்பிரமணியம் சீத்தா, தேவச்சந்திரன் வஜிந்தன் அவர்கள் சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்க இயலவில்லை என்றும் விடுமுறையினை அனுமதிக்குமாறு கடித மூலம் அறியத்தந்துள்ளார்கள். குறித்த கௌரவ உறுப்பினர்களான முத்தலிப் ரகுநாதன், சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன், சிவசுப்பிரமணியம் சீத்தா, தேவச்சந்திரன் வஜிந்தன் அவர்களின் விடுமுறையினை அனுமதிப்பதற்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர்களான முத்தலிப் ரகுநாதன், சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன், சிவசுப்பிரமணியம் சீத்தா, தேவச்சந்திரன் வஜிந்தன் அவர்களின் விடுமுறையினை அனுமதிக்கலாமென கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

  - தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் 17.07.2025 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையை அங்கீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்டது.

  - 17.07.2025 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் சபையின் செயற்பாடுகளை எவ்வாறு நடாத்துவது மற்றும் சபைக்கு வருமானங்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்றும் மற்றும் வாகனத்தரிப்பிட அறவீடுகள் எவ்வாறு அறவிடப்படுகின்றன என்றும் வாகனத்தரிப்பிடங்களுக்கான பற்றுச்சீட்டுகள் பிரதேசசபையினால் வழங்கப்படுகின்றதா எனவும் கேட்டார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் சந்தைகளின் வாகன தரிப்பிடம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் வழங்கப்படும் பற்றுச்சீட்டில் சபையின் இறப்பர் முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும் எனவும் அதனை வருமானப் பரிசோதகர் மேற்பார்வை செய்வதாகவும் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் சுரேகா கோகுலன் அவர்கள் மு.ப 09.40 மணிக்கு வருகை தந்தார்.

➢ 2025.07.17, 2025.07.28, 2025.08.06, 2025.08.14 ஆம் திகதியில் நடைபெற்ற நிதிக்குழுக் கூட்ட சிபாரிசிற்கமைய கொடுப்பனவுகள் விபரம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | AVO Engineering, Kodikamam. | அளவெட்டி நூல் நிலைய புனரமைப்பிற்கான முற்பணக் கொடுப்பனவு | Rs 5,916,048.00 |
| 02 | Kanagaratnam Construction, Manipay. | அளவெட்டி நூல் நிலைய கேள்வி வைப்பினை மீளளித்தல் கொடுப்பனவு | Rs 212,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 03 | Kanagaratnam Construction,<br>1st Cross Street,<br>Manipay. | சபைநிதி -2024 மூலம் மேற்கொள்ளப்பட்ட Renovation Busstand at Tellippalai வேலையின் இறுதிக்கொடுப்பனவிற்குரிய Vat கொடுப்பனவு | Rs 586,851.05 |
| 04 | Barun Construction,<br>Puttur. | சபைநிதி – 2025 Reconstruction of Varathalam Road at Pannalai வேலைக்குரிய முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 2,610,784.66 |
| 05 | Vasantija Electricals<br>K.K.S Road, Chunnakam | வீதி விளக்கு திருத்தப் பொருட்களுக்கான கொடுப்பனவு | Rs 221,500.00 |
| 06 | R.K.Electricals,<br>K.K.S, Mallakam. | கொள்வனவு செய்த வீதி விளக்கு உபகரணங்களிற்கான கொடுப்பனவு | Rs 207,500.00 |
| 07 | Sakthy Engineering | Renovation of Bangalow Road Mallakam PSDG Main – 2025 வேலைக்கான 04 வது பகுதிக் கொடுப்பனவு. | Rs 601,188.00 |
| 08 | T.மலரவன் | NPZA 5195 JCB வாகனம் திருத்தம் மேற்கொண்டமைக்கான கொடுப்பனவு | Rs 847,400.00 |
| 09 | Tharun Construction | சபைநிதி 2025 இனூாக மேற்கொள்ளப்பட்டட Reconstruction of Udaiyarnadappu Road at Mavaikaladdy இற்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 2,606,723.61 |
| 10 | Tharun Construction | சபைநிதி 2025 இனூாக மேற்கொள்ளப்பட்டட Reconstruction of Kondalady Vairavar Kovil Road at keerimalai இற்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 3,037,141.91 |
| 11 | Director General, Wayamba Development Authority Fund | Payment for Service Agreement for CAT 2020 Software | Rs 280,000.00 |
| 12 | முகாமையாளர்,<br>தேசிய சேமிப்பு வங்கி,<br>சுன்னாகம் | நிலையான வைப்பில் வைப்புச் செய்தல் | Rs10,000,000.00 |
| 13 | முகாமையாளர்,<br>தேசிய சேமிப்பு வங்கி,<br>சுன்னாகம் | நிலையான வைப்பில் வைப்புச் செய்தல் | Rs10,000,000.00 |
| 14 | முகாமையாளர்,<br>தேசிய சேமிப்பு வங்கி,<br>சுன்னாகம் | நிலையான வைப்பில் வைப்புச் செய்தல் | Rs10,000,000.00 |
| 15 | தலைவர்/செயலாளர்,கணேச சனசமூக நிலையம்,<br>பன்னாலை. | Reconstruction of Varathalam Road-Stage II at Pannalai வீதி புனரமைப்பு வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 621,302.10 |
| 16 | Kanagaratnam Construction,<br>Manipay. | Construction of Drainage at Sathanantha School lane in Alaveddy வேலைக்கானமுதலாவது பகுதிக் கொடுப்பனவினை சபை நிதியிலிருந்து முற்பணமாக வழங்கல் | Rs 4,450,677.74 |

- கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் JCB வாகனம் திருத்தியமைக்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டினை பரிசீலித்த போது அதன் பற்றுச்சீட்டின் புகைப்படத்தினை கோரிய போது அதனை மறுத்து விட்டார்கள் என்றும் JCB வாகனம் திருத்தத்திற்கான கூலி மிகவும் அதிகமாகவுள்ளது என்றும் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் புகைப்படம் எடுத்தலாகாது என்றும் அதனை குறித்துக்கொண்டு செல்லலாம் எனவும் தெரிவித்தார். திருத்த வேலைகள் யாவும்

இயந்திரப்பொறியியலாளரின் சிபாரிசுக்கமைய இடம்பெறுவதாகவும் பதிவு செய்யப்பட்ட வாகனத்திருத்தும் இடங்களில் தான் வாகனங்கள் திருத்தப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 01/2025.08.20**

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | AVO Engineering, Kodikamam. | அளவெட்டி நூல் நிலைய புனரமைப்பிற்கான முற்பணக் கொடுப்பனவு | Rs 5,916,048.00 |
| 02 | Kanagaratnam Construction, Manipay. | அளவெட்டி நூல் நிலைய கேள்வி வைப்பினை மீளளித்தல் கொடுப்பனவு | Rs 212,000.00 |
| 03 | Kanagaratnam Construction, 1st Cross Street, Manipay. | சபைநிதி -2024 மூலம் மேற்கொள்ளப்பட்ட Renovation Busstand at Tellippalai வேலையின் இறுதிக்கொடுப்பனவிற்குரிய Vat கொடுப்பனவு | Rs 586,851.05 |
| 04 | Barun Construction, Puttur. | சபைநிதி – 2025 Reconstruction of Varathalam Road at Pannalai வேலைக்குரிய முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 2,610,784.66 |
| 05 | Vasantija Electricals K.K.S Road, Chunnakam | வீதி விளக்கு திருத்தப் பொருட்களுக்கான கொடுப்பனவு | Rs 221,500.00 |
| 06 | R.K.Electricals, K.K.S, Mallakam. | கொள்வனவு செய்த வீதி விளக்கு உபகரணங்களிற்கான கொடுப்பனவு | Rs 207,500.00 |
| 07 | Sakthy Engineering | Renovation of Bangalow Road Mallakam PSDG Main – 2025 வேலைக்கான 04 வது பகுதிக் கொடுப்பனவு. | Rs 601,188.00 |
| 08 | T.மலரவன் | NPZA 5195 JCB வாகனம் திருத்தம் மேற்கொண்டமைக்கான கொடுப்பனவு | Rs 847,400.00 |
| 09 | Tharun Construction | சபைநிதி 2025 இனூாக மேற்கொள்ளப்பட்டட Reconstruction of Udaiyarnadappu Road at Mavaikaladdy இற்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 2,606,723.61 |
| 10 | Tharun Construction | சபைநிதி 2025 இனூாக மேற்கொள்ளப்பட்டட Reconstruction of Kondalady Vairavar Kovil Road at keerimalai இற்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 3,037,141.91 |
| 11 | Director General, Wayamba Development Authority Fund | Payment for Service Agreement for CAT 2020 Software | Rs 280,000.00 |
| 12 | முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம் | நிலையான வைப்பில் வைப்புச் செய்தல் | Rs10,000,000.00 |
| 13 | முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம் | நிலையான வைப்பில் வைப்புச் செய்தல் | Rs10,000,000.00 |
| 14 | முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம் | நிலையான வைப்பில் வைப்புச் செய்தல் | Rs10,000,000.00 |
| 15 | தலைவர்/செயலாளர்,கணேச சனசமூக நிலையம், பன்னாலை. | Reconstruction of Varathalam Road-Stage II at Pannalai வீதி புனரமைப்பு வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 621,302.10 |
| 16 | Kanagaratnam Construction, Manipay. | Construction of Drainage at Sathanantha School lane in Alaveddy வேலைக்கானமுதலாவது பகுதிக் கொடுப்பனவினை சபை நிதியிலிருந்து முற்பணமாக வழங்கல் | Rs 4,450,677.74 |

மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஜெகதீஸ்வரி சுதர்சன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் Higher National Diploma in Engineering (HNDE) கற்கைநெறியினை தொடர்கின்ற திரு.கு.சஜீபன் அவர்கள் ஆறு மாத காலத்திற்கு எமது சபையில் பயிற்சி பெறுவதற்கு கோரிக்கை கடிதம் சமர்ப்பித்துள்ளார். அவரை 01.09.2025 இலிருந்து 28.02.2026 வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு எமது சபையில் பயிற்சியாளராக இணைத்துக் கொள்வதற்கும் சபை நிதி மூலம் நாளாந்தம் ரூபா 1,000.00 கொடுப்பனவு வழங்குவதற்கும் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது

**தீர்மான இல :- 02/2025.08.20**

உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் Higher National Diploma in Engineering (HNDE) கற்கைநெறியினை தொடர்கின்ற திரு.கு.சஜீபன் அவர்கள் ஆறு மாத காலத்திற்கு எமது சபையில் பயிற்சி பெறுவதற்கு கோரிக்கை கடிதம் சமர்ப்பித்துள்ளார். அவரை 01.09.2025 இலிருந்து 28.02.2026 வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு எமது சபையில் பயிற்சியாளராக இணைத்துக் கொள்வதற்கும் சபை நிதி மூலம் நாளாந்தம் ரூபா 1,000.00 கொடுப்பனவு வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- எமது சபைக்கு உள்ளூராட்சி அமைச்சினால் Performance grants for Local Authorities (PGLA) திட்டத்தின் மூலம் 15மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் எமது சபைக்கு புதிதாக 6000 L Gully Bowser ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு திட்டமுன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது. Gully Bowser கொள்வனவு செய்வதற்கான மதிப்பீடு ரூபா 15.93 மில்லியனாக காணப்படுவதால் ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக தேவைப்படும் நிதியினை சபைநிதியிலிருந்து வழங்குவதற்கு (ரூபா 0.93மில்லியன்) சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 03/2025.08.20**

எமது சபைக்கு உள்ளூராட்சி அமைச்சினால் Performance grants for Local Authorities (PGLA) திட்டத்தின் மூலம் 15மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் எமது சபைக்கு புதிதாக 6000 L Gully Bowser ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு திட்டமுன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது. Gully Bowser கொள்வனவு செய்வதற்கான மதிப்பீடு ரூபா 15.93 மில்லியனாக காணப்படுவதால் ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக தேவைப்படும் நிதியினை சபைநிதியிலிருந்து வழங்குவதற்கு (ரூபா 0.93மில்லியன்) அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- சபைநிதி 2025 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction fo Elakesari Ponnaiya 2 nd cross Road at Kurumpasiddy east வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு ரூபா 2,415,569.63 வழங்குவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 04/2025.08.20**

சபைநிதி 2025 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction fo Elakesari Ponnaiya 2 nd cross Road at Kurumpasiddy east வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு ரூபா 2,415,569.63 வழங்குவதற்கு கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பெரும் பரப்பு பிள்ளையார் கோயில் வீதிக்கு 2023ம் ஆண்டு அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் 4 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இவ் வேலை மாவட்ட செயலகத்தால் மீள்குடியேற்ற அபிவிருத்தி திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. எனவே அந் நிதியினை கீரிமலை செம்பொன் வாய்க்கால் மயானம் வீதி புனரமைப்பிற்கு பயன்படுத்துவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 05/2025.08.20**

பெரும் பரப்பு பிள்ளையார் கோயில் வீதிக்கு 2023ம் ஆண்டு அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் 4 மில்லியன் ஒதுக்கப்பட்டது. குறித்த வேலை மாவட்ட செயலகத்தால் மீள்குடியேற்ற அபிவிருத்தி திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. குறித்த நிதியினை கீரிமலை செம்பொன் வாய்க்கால் மயானம் வீதி புனரமைப்பு பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- வாளித் தொழிற்சாலை 1வது வலதுபக்க வீதி புனரமைப்பிற்கு 2023ம் ஆண்டு அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் 3 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இவ் வேலைக்காக 1.99 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே மீதி நிதியை கட்டுவன் முத்துமாரி அம்மன் வீதி புனரமைப்பிற்கு பயன்படுத்துவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 06/2025.08.20**

வாளித் தொழிற்சாலை 1வது வலதுபக்க வீதி புனரமைப்பிற்கு 2023ம் ஆண்டு அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் 3 மில்லியன் ஒதுக்கப்பட்டது. குறித்த வேலைக்காக 1.99 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே மீதி நிதியை கட்டுவன் முத்துமாரி அம்மன் வீதி புனரமைப்பிற்கு பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- சபை நிதி – 2025, 2023 அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படவுள்ள பின்வரும் வேலைத்திட்டங்களிற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்காக சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் |
|---|---|---|---|
| 01 | அப்பாச்சிப்பிள்ளை கொங்கிறீற் வீதி புனரமைப்பு முதலாவது கட்டம் – அளவெட்டி தெற்கு | 6,735,000.00 | 19 |
| 02 | இக்கிரானை முதலாவது வீதியின் மூன்றாவது வலது பக்க வீதி புனரமைப்பு – மல்லாகம் தெற்கு | 1,730,000.00 | 21 |
| 03 | போத்தலை இணைப்பு வீதி புனரமைப்பு – மாவிட்டபுரம் தெற்கு | 1,850,000.00 | 09 |
| 04 | சுதந்திரபுரம் குடியேற்ற திட்ட வீதி புனரமப்பு – வசாவிளான் கிழக்கு | 3,020,000.00 | 15 |
| 05 | காங்கேசன்துறை மயான வீதி புனரமைப்பு | 5,000,000.00 | 03 |
| 06 | கிட்டங்கி வீதி புனரமைப்பு – தெல்லிப்பளை | 6,800,000.00 | 17 |
| 07 | செம்பொன் வாய்க்கால் மயானம் வீதி புனரமைப்பு - கீரிமலை | 3,600,000.00 | 02 |

| | | | |
|---|---|---|---|
| 08 | கோட்டைக்காடு வீதி புனரமைப்பு – மல்லாகம் | 2,244,000.00 | 20 |
| 09 | பூதவராயர் ஆலய வீதிக்கான மதகு அமைத்தல் - மயிலிட்டி | 1,318,000.00 | 05 |
| 10 | வசாவிளான் இந்து மயானம் மதில் அமைத்தல் - பலாலி தெற்கு | 3,687,000.00 | 08 |
| 11 | கட்டுவன் விளையாட்டு மைதானம் மதில் அமைத்தல்- தென்மயிலை | 2,000,000.00 | 14 |
| 12 | காங்கேசன்துறை தலைமை அலுவலகம் மதில் அமைத்தல் | 9,800,000.00 | 03 |

**தீர்மான இல :- 07/2025.08.20**

*சபை நிதி – 2025, 2023 அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படவுள்ள பின்வரும் வேலைத்திட்டங்களிற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

| இல | வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் |
|---|---|---|---|
| 01 | அப்பாச்சிப்பிள்ளை கொங்கிறீற் வீதி புனரமைப்பு முதலாவது கட்டம் – அளவெட்டி தெற்கு | 6,735,000.00 | 19 |
| 02 | இக்கிரானை முதலாவது வீதியின் மூன்றாவது வலது பக்க வீதி புனரமைப்பு – மல்லாகம் தெற்கு | 1,730,000.00 | 21 |
| 03 | போத்தலை இணைப்பு வீதி புனரமைப்பு – மாவிட்டபுரம் தெற்கு | 1,850,000.00 | 09 |
| 04 | சுதந்திரபுரம் குடியேற்ற திட்ட வீதி புனரமப்பு – வசாவிளான் கிழக்கு | 3,020,000.00 | 15 |
| 05 | காங்கேசன்துறை மயான வீதி புனரமைப்பு | 5,000,000.00 | 03 |
| 06 | கிட்டங்கி வீதி புனரமைப்பு – தெல்லிப்பளை | 6,800,000.00 | 17 |
| 07 | செம்பொன் வாய்க்கால் மயானம் வீதி புனரமைப்பு - கீரிமலை | 3,600,000.00 | 02 |
| 08 | கோட்டைக்காடு வீதி புனரமைப்பு – மல்லாகம் | 2,244,000.00 | 20 |
| 09 | பூதவராயர் ஆலய வீதிக்கான மதகு அமைத்தல் - மயிலிட்டி | 1,318,000.00 | 05 |
| 10 | வசாவிளான் இந்து மயானம் மதில் அமைத்தல் - பலாலி தெற்கு | 3,687,000.00 | 08 |
| 11 | கட்டுவன் விளையாட்டு மைதானம் மதில் அமைத்தல்- தென்மயிலை | 2,000,000.00 | 14 |
| 12 | காங்கேசன்துறை தலைமை அலுவலகம் மதில் அமைத்தல் | 9,800,000.00 | 03 |

- சபை நிதி – *2025* இன் மூலம் பின்வரும் வேலைத்திட்டத்தினை அவசர தேவை கருதி சமூக மட்ட அமைப்பிற்கு நேரடி ஒப்பந்தம் வழங்கி நிறைவேற்றுவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் |
|---|---|---|---|
| 01 | துர்க்கை அம்மன் கோவில் வீதி புனரமைப்பு – தெல்லிப்பளை | 2,000,000.00 | 13 |

**தீர்மான இல :- 08/2025.08.20**

*சபை நிதி – 2025 இன் மூலம் பின்வரும் வேலைத்திட்டத்தினை சமூக மட்ட அமைப்பிற்கு நேரடி ஒப்பந்தம் வழங்கி நிறைவேற்றுவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஜெகதீஸ்வரி சுதர்சன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

| இல | வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் |
|---|---|---|---|
| *01* | துர்க்கை அம்மன் கோவில் வீதி புனரமைப்பு – தெல்லிப்பளை | 2,000,000.00 | 13 |

- *சபை நிதி – 2025 இன் மூலம் பின்வரும் வேலைகளை கூறு விலை கோரல் முறையில் செய்வற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.*

| இல | வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் |
|---|---|---|---|
| *01* | தெல்லிப்பளையிலுள்ள கடைத் தொகுதிக்கு கண்ணாடிக் கதவு இடல் | 200,000.00 | 17 |
| *02* | கிணற்று மூடி இடல் - மல்லாகம் உப அலுவலகம் | 86,670.00 | 20 |
| *03* | கிணற்று மூடி இடல் - வீமன்காமம் சந்தை | 75,041.00 | 09 |

**தீர்மான இல :- 09/2025.08.20**

*சபை நிதி – 2025 இன் மூலம் பின்வரும் வேலைகளை கூறு விலை கோரல் முறை மூலம் வேலையினை நிறைவேற்றுவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

| இல | வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் |
|---|---|---|---|
| *01* | தெல்லிப்பளையிலுள்ள கடைத் தொகுதிக்கு கண்ணாடிக் கதவு இடல் | 200,000.00 | 17 |
| *02* | கிணற்று மூடி இடல் - மல்லாகம் உப அலுவலகம் | 86,670.00 | 20 |
| *03* | கிணற்று மூடி இடல் - வீமன்காமம் சந்தை | 75,041.00 | 09 |

- *சபை நிதி – 2025 இன் மூலம் கீழ்வரும் வேலைத்திட்டம் அவசர தேவை கருதி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுக்கமைய பன்னாலை கணேச சனசமூக நிலையத்திற்கு நேரடி ஒப்பந்தம் வழங்கி நிறைவேற்றப்பட்டது. குறித்த வேலையினை நிறைவுசெய்தமைக்கான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.*

| வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் | சனசமூக நிலையம் |
|---|---|---|---|
| வர்த்தலம் பிள்ளையார் ஆலய வீதி – கட்டம் II | 650,000.00 | 11 | கணேச சனசமூக நிலையம் - பன்னாலை |

**தீர்மான இல :- 10/2025.08.20**
*சபைநிதி 2025 இன் மூலம் கீழ்வரும் வேலைத்திட்டம் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுக்கமைய பன்னாலை கணேச சனசமூக நிலையத்திற்கு நேரடி ஒப்பந்தம் வழங்கி குறித்த வேலையினை நிறைவேற்றியமைக்கு தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பாலச்சந்திரன் லஜிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

| வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் | சனசமூக நிலையம் |
|---|---|---|---|
| வர்த்தலம் பிள்ளையார் ஆலய வீதி – கட்டம் II | 650,000.00 | 11 | கணேச சனசமூக நிலையம் - பன்னாலை |

- *சபைநிதி 2025 இன் மூலம் கீழ்வரும் வேலைத்திட்டம் அவசர தேவை கருதி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுக்கமைய ஊரங்குணை விவேகானந்தா சனசமூக நிலைத்திற்கு நேரடி ஒப்பந்தம் வழங்கி வேலை நடைபெற்று வருகின்றது. குறித்த வேலையினை நிறைவேற்றியமைக்காக சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.*

| வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் | சனசமூக நிலையம் |
|---|---|---|---|
| கட்டுவன் முத்துமாரி அம்மன் வீதி புனரமைப்பு | 980,000.00 | 16 | ஊரங்குணை விவேகானந்தா சனசமூக நிலையம் |

**தீர்மான இல :- 11/2025.08.20**
*சபைநிதி 2025 இன் மூலம் கீழ்வரும் வேலைத்திட்டம் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுக்கமைய ஊரங்குணை விவேகானந்தா சனசமூக நிலைத்திற்கு நேரடி ஒப்பந்தம் வழங்கி குறித்த வேலையினை நிறைவேற்றியமைக்கு தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

| வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் | சனசமூக நிலையம் |
|---|---|---|---|
| கட்டுவன் முத்துமாரி அம்மன் வீதி புனரமைப்பு | 980,000.00 | 16 | ஊரங்குணை விவேகானந்தா சனசமூக நிலையம் |

- கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன் அவர்கள் தனது வட்டாரத்தில் நடைபெறும் வீதிப் புனரமைப்பு வேலைகள் தொடர்பாக தனக்கு அறியத்தரப்படவில்லை எனத் தெரிவித்தார்.

- *வரவு செலவு திட்டம் 2025 இல் ஒதுக்கப்பட்ட சதானந்தா வீதி வடிகால் புனரமைப்பிற்காக (கட்டம் I) ரூபா 3 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இவ் வேலைத்திட்டம் PSDG இல் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அந்நிதியை அவ்வட்டாரத்திலுள்ள செட்டிச்சோலை 2வது வலது பக்க வீதி புனரமைப்பிற்கு பயன்படுத்துவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.*

**தீர்மான இல :- 12/2025.08.20**
வரவு செலவு திட்டம் 2025 இல் ஒதுக்கப்பட்ட சதானந்தா வீதி வடிகால் புனரமைப்பிற்காக (கட்டம் I) ரூபா 3 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இவ் வேலைத்திட்டம் PSDG இல் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் அந்நிதியை அவ்வட்டாரத்திலுள்ள செட்டிச்சோலை 2வது வலது பக்க வீதி புனரமைப்பிற்கு பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- வல்லை சங்கானை வீதியின் இடது பக்க 3ஆம் வீதி புனரமைப்பிற்கு 2023ம் ஆண்டு அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் 1.6 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இவ்வீதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே அந்நிதியினை வல்லை சங்கானை வீதியின் இடது பக்க 9ஆம் வீதி புனரமைப்பிற்கு பயன்படுத்துவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 13/2025.08.20**
வல்லை சங்கானை வீதியின் இடது பக்க 3ஆம் வீதி புனரமைப்பிற்கு 2023ம் ஆண்டு அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் 1.6 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இவ்வீதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே அந்நிதியினை வல்லை சங்கானை வீதியின் இடது பக்க 9ஆம் வீதி புனரமைப்பிற்கு பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினூடாக மேற்கொள்ளப்படவுள்ள "யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளக வீதிகளை புனரமைத்தல்" எனும் திட்டத்தினூடாக பின்வரும் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளமையால் அவற்றினை குறித்த அமைச்சினூடாக நடைமுறைப்படுத்துவதற்காக சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| S.No | Name of the Road | GND | Estimated Amount (Rs) |
|---|---|---|---|
| 1 | Construction of Yarmai Kudiyiruppu Road | J/246 | 2,000,000.00 |
| 2 | Construction of Perumparappu Pillayar Kudiyetra Thiddam 3rd Lane | J/246 | 2,000,000.00 |
| 3 | Construction of Perumparappu Pillayar Kudiyetra Thiddam 2nd Lane | J/246 | 1,748,000.00 |
| 4 | Construction Concrete Road of Valankavatthi Vellavaikkal Road | J/246 | 1,826,000.00 |
| 5 | Reconstruction Naguleswaram Mavaikaladdy 1 Right Lane | J/225 | 1,530,000.00 |
| 6 | Construction of Market Road at Kankesanthurai | J/234 | 870,660.00 |
| 7 | Construction of Keerimalai road 2 Right Lane at Kankesanthurai | J/234 | 1,800,000.00 |
| 8 | Construction of Perumparappu pillayar kudiyeta thiddam 1st Lane | J/246 | 1,907,000.00 |
| 9 | Construction of Akkanthanai road | J/246 | 1,870,000.00 |
| 10 | Construction of Kiramakkodu Kudiyiruppu Internal Road | J/246 | 1,357,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 11 | Construction of Avanakilanai Road | J/244 | 2,000,000.00 |
| 12 | Construction of Amman Kovil Road | J/253 | 1,992,000.00 |
| 13 | Construction of Gnanavairavar Kovil Road | J/254 | 1,958,000.00 |
| 14 | Construction of Navalady Kudiyiruppu Road | J/246 | 1,513,000.00 |
| 15 | Construction of Nagathampiran Road | J/254 | 2,000,000.00 |
| 16 | Construction of Manaviral Road | J/253 | 2,000,000.00 |
| 17 | Construction of Thulankaipay Road | J/253 | 1,872,000.00 |
| 18 | Construction of Sakathevankaladdy Road | J/253 | 1,750,000.00 |
| Total | | | 31,993,660.00 |

**தீர்மான இல :- 14/2025.08.20**

கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினூடாக மேற்கொள்ளப்படவுள்ள "யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளக வீதிகளை புனரமைத்தல்" எனும் திட்டத்தினூடாக பின்வரும் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளமையால் அவற்றினை குறித்த அமைச்சினூடாக நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| S.No | Name of the Road | GND | Estimated Amount (Rs) |
|---|---|---|---|
| 1 | Construction of Yarmai Kudiyiruppu Road | J/246 | 2,000,000.00 |
| 2 | Construction of Perumparappu Pillayar Kudiyetra Thiddam 3rd Lane | J/246 | 2,000,000.00 |
| 3 | Construction of Perumparappu Pillayar Kudiyetra Thiddam 2nd Lane | J/246 | 1,748,000.00 |
| 4 | Construction Concrete Road of Valankavatthi Vellavaikkal Road | J/246 | 1,826,000.00 |
| 5 | Reconstruction Naguleswaram Mavaikaladdy 1 Right Lane | J/225 | 1,530,000.00 |
| 6 | Construction of Market Road at Kankesanthurai | J/234 | 870,660.00 |
| 7 | Construction of Keerimalai road 2 Right Lane at Kankesanthurai | J/234 | 1,800,000.00 |
| 8 | Construction of Perumparappu pillayar kudiyeta thiddam 1st Lane | J/246 | 1,907,000.00 |
| 9 | Construction of Akkanthanai road | J/246 | 1,870,000.00 |
| 10 | Construction of Kiramakkodu Kudiyiruppu Internal Road | J/216 | 1,357,000.00 |
| 11 | Construction of Avanakilanai Road | J/244 | 2,000,000.00 |
| 12 | Construction of Amman Kovil Road | J/253 | 1,992,000.00 |
| 13 | Construction of Gnanavairavar Kovil Road | J/254 | 1,958,000.00 |
| 14 | Construction of Navalady Kudiyiruppu Road | J/246 | 1,513,000.00 |
| 15 | Construction of Nagathampiran Road | J/254 | 2,000,000.00 |
| 16 | Construction of Manaviral Road | J/253 | 2,000,000.00 |
| 17 | Construction of Thulankaipay Road | J/253 | 1,872,000.00 |
| 18 | Construction of Sakathevankaladdy Road | J/253 | 1,750,000.00 |
| Total | | | 31,993,660.00 |

- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் புதிதாக புனரமைக்கப்படும் வீதிகளுக்கு Vibration றோலர் முலம் Compact செய்து தான் கற்கள் அடுக்கப்படல் வேண்டும் எனவும் இம் முறை மூலம் வீதிகள் புனரமைப்பு செய்யும் போது கடைப்பிடிக்கப்படாமல் இருந்தால் பெரிய வாகனங்கள் செல்லும் போது வீதி விரிவடையும் என்றும் புன்னியர் வீதியிலும் இந்தப் பிரச்சினை காணப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் Vibration றோலர் என்று சொல்லி வெறும் உருளையை மட்டும் பயன்படுத்துகிறார்கள் என்றும் அதில் Vibration இல்லை என்றும் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் தொழில்நுட்ப குழுவிற்கு புனரமைக்கப்படும் வீதிகளின் விபரங்களினை தந்தால் தொழில்நுட்ப குழு உறுப்பினர்கள் மேற்பார்வை செய்ய இலகுவாக இருக்குமெனத் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் தற்போது நடைபெறும் வேலைகள் சபை பொறுப்பேற்கமுன் தொடங்கியது என்றும் எதிர் வரும் காலத்தில் நடைபெறும் புனரமைப்பு வேலைகளுக்குரிய விபரங்கள் தங்களிற்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

➢ எமது அலுவலக பாவனைக்காக Desktop Computer – 04 (Unit Cost – 300,000.00) உத்தேச மதிப்பீட்டிற்கமைய கொள்வனவு செய்வதற்கான சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 15/2025.08.20**

எமது அலுவலக பாவனைக்காக Desktop Computer – 04 (Unit Cost – 300,000.00) உத்தேச மதிப்பீட்டிற்கமைய கொள்வனவு செய்வதற்கான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சந்திரன் தயானி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ சபைக்கு கிடைக்கப்பெற்ற முத்திரைத்தீர்வை வருமானத்தில் இருந்து சபைநிதி வேலைத்திட்டங்களுக்கு 30மில்லியனை தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகக் கிளையில் 10 மில்லியன்களாக (3x10) 3மாத கால வைப்பிலிட்டமைக்கான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 16/2025.08.20**

சபைக்கு கிடைக்கப்பெற்ற முத்திரைத்தீர்வை வருமானத்தில் இருந்து சபைநிதி வேலைத்திட்டங்களுக்கு 30 மில்லியனை தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகக் கிளையில் 10 மில்லியன்களாக (3x10) 3மாத கால வைப்பிலிட்டமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

✓ வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் கிடைக்கப்பெற்றுள்ளமை சபையின் தகவலுக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

- ✓ தொலைத்தொடர்பு சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு பூதவராயர் வீதி, பன்னாலை. தெல்லிப்பளை எனும் முகவரியில் Multi purpose Lamp pole அமைப்பதற்காக செயல்திட்ட பணிப்பாளர், edotco services Lanka (pvt)Ltd இனால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை தகவலுக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் பாலச்சந்திரன் லஜிதரன் அவர்கள் இது பொருத்துவதால் மக்களுக்கு பாதிப்பு இல்லையா என்றும் அவ் இடத்தில் வாழும் மக்களிடமும் இது தொடர்பாக கதைத்த பின் அனுமதி கொடுப்பது சம்பந்தமாக தீர்மானிக்கலாம் என்று தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் இதனால் ஒரு பாதிப்பும் இல்லை என்றும் பெரும்பாலான இடங்களில் பொருத்தப்பட்டுள்ளது என்றும் சுன்னாகம், மயிலிட்டியிலும் மற்றும் தையிட்டி இராணுவமுகாம் உள்ள இடத்திலும் பொருத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் தையிட்டி இராணுவமுகாம் உள்ள இடத்தில் இருக்கும் Tower தனியார் உடையதா அல்லது இராணுவத்தினருடையதா அதற்கான வாடகை யாருக்கு கொடுக்கிறார்கள் எனவும் கேட்டார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் Tower உள்ள இடம் தனியாருடைய காணி எனவும் தற்போது அவர்கள் இங்கு இல்லை என்றும் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் காங்கேசன்துறை கடைத்தொகுதி விடுவிக்கப்பட்டுள்ளதா எனக் கேட்டார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் அக் கடைத்தொகுதி மற்றும் காங்கேசன்துறையிலுள்ள இராணுவ வாகனங்கள் சுத்திகரிப்பு நிலையமும் இன்னும் விடுவிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன் அவர்கள் பன்னாலையில் Tower அமைப்பதற்கு மக்களால் கோரப்பட்டுள்ளதா நிறுவனத்தினால் கோரப்பட்டதா எனக் கேட்டார். மக்களிடம் அனுமதி பெற்ற பின்பு Tower அமைப்பதற்கான அனுமதி தொடர்பாக முடிவு செய்யலாம் எனத் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் பன்னாலை Tower சம்பந்தமாக மக்களிடமும் கோயில் நிர்வாகத்துடனும் கதைத்து முடிவு செய்யலாம் எனத் தெரிவித்தார்.

- ✓ உள்ளூராட்சி வார செயற்பாடுகள் *2025.09.15 -2025.09.21*

| **உள்ளூராட்சி வாரம் - 2025 செயற்திட்ட விபரம்** | | |
|---|---|---|
| **பிரதான வேலைத் திட்டங்கள்** | **திகதி** | **நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்பாடுகள்** |
| நடமாடும் சேவை தினம் | *15.09.2025* | வருமானங்களைசேகரித்தல்:-<br>வட்டார ரீதியாக பல்வேறு இடங்களிலும் நிலுவையாக உள்ள ஆதனவரி அறவீடு செய்தல்.<br>சுற்றுச்சூழல் உரிமம் , வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக துண்டுப் பிரசுரம் வழங்குதல், பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் கருத்துக்களைப் பெறுதல். அதற்கான தீர்வைப் பெற்றுக்கொடுத்தல் |
| | | ஆயுர்வேத மருத்துவ சேவையும் ஆலோசனையும் மற்றும் குழந்தைகள், பெரியவர்களுக்கான மருத்துவ பரிசோதனை, ஆலோசனைகள் வழங்குதல் |

| | | |
|---|---|---|
| | | போதை ஒழிப்பு மற்றும் உடல், உள ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை பொது சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடன் இணைந்து செயற்படுத்தல் |
| சுற்றுச்சூழல் மற்றும் மரம் நடும் தினம் - உலக ஓசோன் தினம் | *16.09.2025* | மரம் நடுகை தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளல்.<br>துண்டுப் பிரசுரம் வழங்குதல், பதாதைகள் காட்சிப்படுத்தல் திண்மக் கழிவகற்றல் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல், குப்பைகளை தரம் பிரித்து போடுவதற்கான தொட்டிகள் வழங்குதல்,<br>மீள்சுழற்சி நிலையத்தில் உருவாக்கப்பட்ட சேதனப்பசளை மற்றும் மரக்கன்றுகளை குறைந்த விலையில் வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளல். |
| | | பொது இடங்களில் மரங்களை நடுதல், பராமரிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளல். |
| | | இலத்திரனியல் கழிவுகள் குறித்து விழிப்புணர்வு செய்வதுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு கழிவுகளை வழங்குதல். |
| | | பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு, துண்டுப் பிரசுரம் வழங்குதல்,அதற்கான தொடர் நடவடிக்கை எடுத்தல் |
| சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய தினம் உலக நோயாளி பாதுகாப்பு தினம் | *17.09.2025* | பொதுமக்களின் பங்களிப்புடன் பொது இடங்களில் சிரமதானம் செய்தல், மயானங்களை துப்பரவு செய்தல், |
| | | தொற்றாநோய் தொடர்பான விழிப்புணர்வு, முன்பள்ளி சிறார்கள், முதியோர்களுக்கான சத்துணவு வழங்கல். மருத்துவ ஆலோசனை முகாம் நடத்துதல் |
| | | டெங்கு நோய், சிக்கின்குனியா தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல், நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையினை மேற்கொள்ளல். |
| வருமான ஊக்குவிப்பு நாள் | *18.09.2025* | வரிப்பணத்தை வாடகை மற்றும் ஆதனவரி கட்டணம் ஆகியவற்றை குறிப்பிட்ட நாளில் செலுத்த தவறியவர்களுக்கு சலுகை அடிப்படையில் செலுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளல். |
| இலக்கியம், கல்வி மற்றும் நூலக தினம் | *19.09.2025* | நூலக வாசகர் வட்டம், ஆலோசனைக் குழு உறுப்பினர்களை வலுப்படுத்தி பாடசாலை மாணவர்கள் மத்தியில் போட்டி, கண்காட்சி போன்ற நிகழ்வுகளை ஒழுங்குசெய்தல். |
| | | முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் நடாத்துதல், பெற்றோர்களின் பங்களிப்புடன் குழந்தைகளுக்கான சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் வாசிப்பு பழக்கத்தினையும் ஏற்படுத்தல் |
| | | நூலக நடமாடும் சேவையினை ஒழுங்குபடுத்துதல், நூலகம் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள எழுத்தாளர்களை கௌரவித்தல் அவர்களின் புத்தகங்களை சேகரித்து நூலகங்களில் முறையாகப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளல். |

| | | |
|---|---|---|
| பொதுப்பயன்பாட்டு தினம்<br>உலக தூய்மைப்படுத்தும் தினம் | *20.09.2025* | சந்தைகள், வாராந்த சந்தைகள், குடிநீர் வசதி, தெருவிளக்கு, விளையாட்டு மைதானங்கள்,மயானங்கள் போன்றவற்றைச் சுத்தம் செய்தல். பராமரிப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளல்.<br>பதிவுசெய்யப்பட்ட பொது அமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் குழுக்களை கூட்டி உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார பிரதேசத்திற்கு தேவையான திட்டங்களுக்கான ஆலோசனைகளை வழங்குதல். |
| விளையாட்டு தினம் மற்றும் சான்றிதழ் வழங்கல் | *21.09.2025* | உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல், முன்பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல். |
| | | உள்ளூராட்சி மாத இறுதிநாள் நிகழ்வில் கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல் நடைபெற்ற போட்டிகளுக்கு பரிசில் வழங்குவதுடன் அன்றைய தினத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பாக காணொளி, வீடியோ காண்பித்தல் |

- ➢ உள்ளூராட்சி வாரத்தில் நடைபெறவுள்ள செயற்திட்டத்தில் குப்பைகளை தரம் பிரித்து போடுவதற்கான தொட்டிகள் வழங்குதல் நிகழ்வினை J/213 இல் நடைமுறைப்படுத்துவதற்காக சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.
- கௌரவ உறுப்பினர்களால் இச் செயற்பாடுகள் சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இடம் பெறுமா எனக் கேட்டார்கள்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் முதற்கட்ட நடவடிக்கையாக J/213 இல் நடைமுறைப்படுத்தி ஏனைய இடங்களிலும் நடைமுறைப்படுத்தலாம் எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 17/2025.08.20**

உள்ளூராட்சி வாரத்தில் 16.09.2025 நடைபெறவுள்ள செயற்திட்டத்தில் திண்மக்கழிவுகளை தரம் பிரித்து போடுவதற்கான தொட்டிகள் வழங்குதல் நிகழ்வினை J/213 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதெென கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் உள்ளூராட்சி வாரத்தில் 17.09.2025 நடைபெறவுள்ள செயற்திட்டத்தில் டெங்கு நோய், சிக்கின்குனியா விழிப்புணர்வு தொடர்பான மூன்று டெங்கு நுளம்பு மாதிரிகள் தங்களிடம் உள்ளன என்றும் அதனை வாகனத்தில் வைத்து பிரதேச ரீதியாக விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் 17.09.2025 நடைபெறவுள்ள செயற்திட்டத்தில் தங்களுடைய பங்களிப்பினை செய்யலாம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சந்திரன் தயானி அவர்கள் பிரதேச செயலகத்தால் தமது முன்பள்ளிக்கு சத்துணவு வழங்கப்படுகின்றது என்றும் அதே போல் பிரதேசசபையினாலும் சத்துணவு வழங்கப்படுமா என வினாவினார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் எமது பிரதேசசபை நெய்தல் முன்பள்ளிக்கு தான் சத்துணவு வழங்கப்படுகின்றது என்றும் தேவை ஏற்படும் முன்பள்ளிகள் கடிதம் மூலம் கோரிக்கை சமர்ப்பித்தால் சபையினால் ஆராயப்பட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

✓ எமது சபையில் சுகாதாரத் தொழிலாளியாக கடமையாற்றி வருகின்ற திரு.மா.மாதவன் அவர்கள் 28.09.2025 ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார் என்பது தகவலுக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

➢ *பிரதேச சபைகள் சட்டம் பாகம் VI உப பிரிவு 170 இன் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரப்படி 2025 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது உபமானிய வரவுசெலவுத்திட்டம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.*

**இரண்டாவது உபமானிய வரவு செலவுத்திட்டம்-2025**

| வருமானம் | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|
| **இல.** | **வருமான த் தலைப்பு** | **விபரம்** | **தொகை** | **செலவின த் தலைப்பு** | **விபரம்** | **தொகை** |
| 1 | 1.6.65(x) | ஏனையவை | 300,000.00 | 304-04-02 | வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்களைப் பழுதுபார்த்தல் | 930,000.00 |
| 2 | 2.6.62(1) | விற்பனை (படிவங்கள்) | 310,000.00 | 105-05-09 | ஏனையவை (கணக்காய்வுக் கட்டணம், நிகழ்நிலை சேவைகள், விலைமதிப்பீட்டுத்திணைக்களக்கட்டணம், வழக்குச் செலவு, காப்புறுதி, புகைப்பரிசோதனைவரி, ஆதனவரி தொடர்பானவை) | 400,000.00 |
| 3 | 3.5.52(1) | தண்டப்பணங்கள் | 450,000.00 | 201-01-02 | மேலதிக நேர, விடுமுறை நாட்கொடுப்பனவுகள்/கழிவுறிஞ்சி உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு | 30,000.00 |
| 4 | 6.4.43 | கீரிமலை வாகனத் தரிப்பிட கட்டணம் | 300,000.00 | | | |
| 5 | 3-8-81-(1) | மூலதன மானியம் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) | 5,051,865.74 | 309-09-09(iv) | பங்களா வீதி புனரமைப்பு (PSDG) | 601,188.00 |
| | | | | 309-09-09-**ii(G)** | சதானந்தா வீதி வடிகால் புனரமைப்பு (PSDG ) | 4,450,677.74 |
| 6 | 5-7-72(ii) | மூலதன மானியம் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) | 496,755.00 | 505-05-03-i(G) | வீதி விளக்கு திருத்தம் (PSDG ) | 496,755.00 |
| | | **மொத்தம்** | **6,908,620.74** | | **மொத்தம்** | **6,908,620.74** |

***தீர்மான இல :- 18/2025.08.20***

*பிரதேச சபைகள் சட்டம் பாகம் VI உப பிரிவு 170 இன் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரப்படி 2025 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது உபமானிய வரவுசெலவுத்திட்டத்திற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ*

உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**இரண்டாவது உபமானிய வரவு செலவுத்திட்டம்-2025**

| வருமானம் | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|
| **இல.** | **வருமானத் தலைப்பு** | **விபரம்** | **தொகை** | **செலவினத் தலைப்பு** | **விபரம்** | **தொகை** |
| 1 | 1.6.65(x) | ஏனையவை | 300,000.00 | 304-04-02 | வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்களைப் பழுதுபார்த்தல் | 930,000.00 |
| 2 | 2.6.62(1) | விற்பனை (படிவங்கள்) | 310,000.00 | 105-05-09 | ஏனையவை (கணக்காய்வுக் கட்டணம், நிகழ்நிலை சேவைகள், விலைமதிப்பீட்டுத்திணைக்களக்கட்டணம், வழக்குச் செலவு, காப்புறுதி, புகைப்பரிசோதனைவரி, ஆதனவரி தொடர்பானவை) | 400,000.00 |
| 3 | 3.5.52(1) | தண்டப்பணங்கள் | 450,000.00 | 201-01-02 | மேலதிக நேர, விடுமுறை நாட்கொடுப்பனவுகள்/கழிவுறிஞ்சி உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு | 30,000.00 |
| 4 | 6.4.43 | கீரிமலை வாகனத் தரிப்பிட கட்டணம் | 300,000.00 | | | |
| 5 | 3-8-81-(1) | மூலதன மானியம் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) | 5,051,865.74 | 309-09-09(iv) | பங்களா வீதி புனரமைப்பு (PSDG) | 601,188.00 |
| | | | | 309-09-09-**ii(G)** | சதானந்தா வீதி வடிகால் புனரமைப்பு (PSDG ) | 4,450,677.74 |
| 6 | 5-7-72(ii) | மூலதன மானியம் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) | 496,755.00 | 505-05-03-i(G) | வீதி விளக்கு திருத்தம் (PSDG ) | 496,755.00 |
| | | **மொத்தம்** | **6,908,620.74** | | **மொத்தம்** | **6,908,620.74** |

- ✓ கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வீதி விபத்துக்களை தவிர்ப்பதற்காக பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னரும் (மு.ப 6.30 – 8.00 மணி வரை) பாடசாலை நிறைவடைந்ததன் பின்னரும் (பி.ப 1.00 – 2.30 மணி வரை) கனரக வாகனங்களை அவ்வழியூடாக செல்வதை தவிர்ப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டும் என்ற பிரேரணை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் தனது பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவித்தார். வீதி விபத்துக்களை தவிர்ப்பதற்காக பாடசாலை ஆரம்பிப்பதற்கு

முன்னரும் பாடசாலை நிறைவடைந்ததன் பின்னரும் கனரக வாகனங்கள் அவ்வழியூடாக செல்வதை தவிர்ப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலிகாமம் வடக்கில் பாடசாலைகள் உள்ள அனைத்து வீதிகளிலும் அறிவித்தல் பலகை இடப்படல் வேண்டும் என்றும் டிப்பரில் ஈரமண் கொண்டு செல்லும் போது மண், தண்ணீர் பாடசாலை பிள்ளைகளின் உடையில் தெறிக்கிறது என்றும் உலர்ந்த மண் கொண்டு செல்லும் போது காற்று காரணமாக கண்களுக்குள் மண் விழுகிறது இவ்வாறான பிரச்சனைகளை தவிர்ப்பதற்காக தான் இந்த பிரேரணையை முன்வைத்தேன் என்றும் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் இதே போல சபையின் சிறிய வீதிகளால் கனரக வாகனங்கள் செல்வதனையும் தடைசெய்தல் வேண்டும் அவ்வாறு செய்தால் வீதிகளும் சேதமடையாமல் இருக்குமெனவும் விபத்துக்களும் குறையும் எனவும் கூறினார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் வீதிகளை அடையாளப்படுத்தி அறிவித்தல் பலகைகளை இட்டு அது தொடர்பாக வர்த்தமானியிலும் பிரசுரித்தல் வேண்டும் எனத் தெரிவித்தார்.

***தீர்மான இல :- 19/2025.08.20***

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னரும் (மு.ப 6.30 – 8.00 மணி வரை) பாடசாலை நிறைவடைந்ததன் பின்னரும் (பி.ப 1.00 – 2.30 மணி வரை) கனரக வாகனங்கள் அவ்வழியூடாக செல்வதை தவிர்க்கப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ✓ கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட காங்கேசன்துறை வீதியில் மாவிட்டபுரம் மாவை சித்திவிநாயகர் அம்பாள் ஆலயம் மற்றும் மாவை பாரதி சனசமூக நிலையம் மறுமலர்ச்சி மன்றம் பகுதிக்கு முன்பாக உள்ள வீதிக்கு சித்தி விநாயகர் வீதி எனும் பெயரினை சூட்டுவது தொடர்பான பிரேரணை கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.
- கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் தனது பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவித்தார். மாவை பாரதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட குறித்த தீர்மானம் சபையில் நிறைவேற்றுவதற்கு தன்னால் பிரேரணையாக சமர்ப்பிக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் வீதிக்கு புதிதாக பெயர் சூட்டும் போது அதனை பத்திரிக்கையில் பிரசுரித்து அதற்கு முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் அந்த பெயரினை சூட்டலாம் என தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் சில வீதிகளின் பெயர்கள் அறிய முடியாமல் உள்ளன எனவும் அதனால் புனரமைப்பு செய்யப்பட வேண்டிய வீதிகளின் பெயர்கள் தருவது கடினமாக இருப்பதால் பிரதேசபை அலுவலர் ஒருவரை அனுப்பி வீதிகளின் பெயர்களை தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் திட்டமிடற் பகுதியில் விபரங்களினை பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

***தீர்மான இல :- 20/2025.08.20***

காங்கேசன்துறை வீதியில் மாவிட்டபுரம் மாவை சித்திவிநாயகர் அம்பாள் ஆலயம் மற்றும் மாவை பாரதி சனசமூக நிலையம் மறுமலர்ச்சி மன்றம் பகுதிக்கு முன்பாக உள்ள வீதிக்கு சித்தி விநாயகர் வீதி எனும் பெயரினை சூட்டுவதற்கு அனுமதி வழங்குவததென கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ✓ கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட காங்கேசன்துறை வீதியில் மாவிட்டபுரம் அரசடி சந்தியிலிருந்து கொல்லங்கலட்டி மடத்தடி சந்தி வரை உள்ள வீதிக்கு மாவை சேனாதிராசா வீதியென பெயர் சூட்டுவது தொடர்பான பிரேரணை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது

- மாவை பாரதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் மற்றும் மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச்சங்கத்தினாலும் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது குறித்த வீதிக்குரிய பெயர் பலகைகளையும் அவர்களே செய்து தருவதாகவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் குறித்த வீதியின் பெயர் பதிவில் இல்லை என்றால் வீதிக்கு பெயரினை சூட்டலாம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் பெயர் சூட்டுவதாயின் அதனை பத்திரிகையில் பிரசுரித்து அதற்கு முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் ஆளுநரின் அனுமதியினை தொடர்ந்து நடவடிக்கையினை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

***தீர்மான இல :-* 21/2025.08.20**

*காங்கேசன்துறை வீதியில் மாவிட்டபுரம் அரசடி சந்தியிலிருந்து கொல்லங்கலட்டி மடத்தடி சந்தி வரை உள்ள வீதிக்கு மாவை சேனாதிராசா வீதியென பெயர் சூட்டுவதற்கு அனுமதி வழங்குவது என கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

- ✓ கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்களால் மாவிட்டபுரம் தச்சன் காடு இந்துமயான அபிவிருத்தி சபை அமைப்பது தொடர்பான பிரேரணை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது
- கௌரவ தவிசாளர் அவர்கள் சபையின் சகல மயானங்களுக்கும் அபிவிருத்தி சபை அமைக்க வேண்டும் எனவும் விரைவாக மயான அபிவிருத்தி சபை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்களால் மாவிட்டபுரம் ஆயர்பாடி வீதியில் வீதியோரமாக பாழடைந்த கிணறு மக்கள் போக்குவரத்துக்கு பாதுகாப்பற்ற முறையில் உள்ளமையால் அதனை மூடுவது தொடர்பான பிரேரணை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் தமது பிரேரணை தொடர்பாக அக் கிணறு மக்கள் போக்குவரத்துக்கு பாதுகாப்பற்ற முறையில் காணப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் புதிதாக கிணறு அமைப்பதற்கு தற்போது கூடிய நிதி தேவையேற்படுவதனால் அதனை மூடாமல் திருத்தி அவ்விடத்தில் உயரமாக பாதுகாப்பு வேலி அமைக்கலாம் எனவும் தற்போது பாதுகாப்பற்ற கிணறுகள் சம்பந்தமான விபரங்கள் கோரப்பட்டுள்ளன என்றும் விபரங்களை சமர்ப்பித்து புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

***தீர்மான இல :-* 22/2025.08.20**

*மாவிட்டபுரம் ஆயர்பாடி வீதியில் வீதியோரமாக காணப்படும் பாழடைந்த கிணற்றினை திருத்தி பாதுகாப்பு வேலி அமைப்பதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

- குழாய்க்கிணறுகள் அமைப்பதனால் நிலத்தடி நீர் பாதிப்படைகின்றது என்றும் எனவே அனுமதியின்றி குழாய்க்கிணறு அமைப்பவர்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

***தீர்மான இல :- 23/2025.08.20***
*குழாய்க்கிணறு அமைக்கும் உரிமையாளர்கள் தம்மை எமது சபையில் பதிவு செய்து வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் மற்றும் கிணறு அமைக்கும் உரிமையாளர்கள் 1964 ஆண்டு நீர்வளச்சபையின் சட்ட ஏற்பாட்டுக்கு அமைய அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் அனுமதி பெறப்படாமல் குழாய்க்கிணறு அமைப்பவர்களின் வியாபார உரிமம் இரத்துச்செய்யப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

- சபையின் அனேக கௌரவ உறுப்பினர்களால் வீதி விளக்குகள் பொருத்துவது தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.
- கௌரவ தவிசாளர் அவர்களால் வட்டார ரீதியாக வீதி விளக்குகள் பொருத்துவதற்கும் திருத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தார்.

✓ கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நீண்ட நாட்களாக சிறையிலே வாடும் தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பு அடிப்படையில் ஜனாதிபதி அவர்கள் பொது மன்னிப்பளித்து விடுதலை செய்ய வேண்டும் என்ற பிரேரணை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது

- கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் தமது பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவித்தார். நீண்ட நாட்களாக எதுவித விசாரணையுமின்றி சிறையிலே வாடும் அரசியல் கைதிகளான தமிழ் இளைஞர்களை பொது மன்னிப்பு அடிப்படையில் ஜனாதிபதி அவர்களால் விடுதலை செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

***தீர்மான இல :- 24/2025.08.20***
*நீண்ட நாட்களாக சிறையிலே வாடும் தமிழ் இளைஞர்களான அரசியல் கைதிகளை பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

*இத் தீர்மானத்தினை ஜனாதிபதி அவர்களுக்கு கடிதம் மூலம் அனுப்புவதாக சபையின் கௌரவ உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட்டது.*

✓ கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட யாழ் செம்மணி புதைகுழி விவகாரத்தில் இதுவரை 100ற்கு மேற்பட்ட மனித எலும்புகூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. இந்த தமிழின படுகொலைக்கான நீதி விசாரணைகள் கோரி ஐக்கிய நாடுகள் ஆணையாளரால் சர்வதேச நீதி விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்ற பிரேரணை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் தமது பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவித்தார். யாழ் செம்மணி புதைகுழி விவகாரத்தில் இதுவரை 100ற்கு மேற்பட்ட மனித எலும்புகூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. இந்த தமிழின படுகொலைக்கான நீதி விசாரணைகள் கோரி ஐக்கிய நாடுகள் ஆணையாளரால் சர்வதேச நீதி விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**தீர்மான இல :- 25/2025.08.20**
யாழ் செம்மணி புதைகுழியில் இதுவரை 100ற்கு மேற்பட்ட மனித எலும்புகூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. இந்த தமிழின படுகொலைக்கான நீதி விசாரணைகள் கோரி ஐக்கிய நாடுகள் ஆணையாளரால் சர்வதேச நீதி விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும் என கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ✓ கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேசசபை எல்லை ஆரம்பமாகும் காங்கேசன்துறை பிரதான வீதியில் மல்லாகம் சுன்னாகம் எல்லைப் பகுதியில் (அன்புடன் வரவேற்கின்றது வலிகாமம் வடக்கு பிரதேசசபை) பெயர் பொறித்த பெயர் பலகை நாட்டப்படல் வேண்டும் என்ற பிரேரணை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 26/2025.08.20**
வலிகாமம் வடக்கு பிரதேசசபை எல்லை ஆரம்பமாகும் பிரதான வீதிகளின் எல்லைப் பகுதியில் (அன்புடன் வரவேற்கின்றது வலிகாமம் வடக்கு பிரதேசசபை) என்ற பெயர் பொறித்த பெயர் பலகை இடப்படல் வேண்டும் என கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அனைத்து கௌரவ உறுப்பினர்களாலும் வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் பிரதான எல்லைப்பகுதிகளிலும் அன்புடன் வரவேற்கின்றது வலிகாமம் வடக்கு பிரதேசசபை என்ற பெயர் பொறித்த பெயர் பலகை இடப்படல் வேண்டுமென கோரப்பட்டது.

- கௌரவ தவிசாளர் அவர்களால் சட்ட விரோதமாக தையிட்டி விகாரையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கட்டடத்தினை சென்ற மாத கூட்டம் முடிவடைந்த பின்னர் நேரடியாக சென்று கௌரவ உறுப்பினர்களால் பார்வையிடப்பட்டு அக்கட்டத்தினை உடனடியாக நிறுத்துமாறு எம்மால் தேரருக்கு கடிதம் வழங்கப்பட்டது. தற்போது அக்கட்டடம் அமைப்பது நிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

2025.07.02 அமைச்சரவை குறிப்பின் மூலம் தையிட்டி திஸ்ஸ விகாரை சிக்கலை தீர்ப்பதற்கான குழுவொன்றை நியமனம் செய்தல் தொடர்பான அறிக்கை கௌரவ தவிசாளர் அவர்களால் வாசித்து ஆராயப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் சென்ற மாத கூட்டம் முடிவடைந்த பின்னர் தையிட்டியில் சட்டவிரோதமாக கட்டப்படும் கட்டடத்தை சபை உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டோம். அன்று அமைச்சரும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரரும் அரச அதிபரும் வந்திருந்தார்கள் அப்போது அமைச்சர் அவர்கள் இரு வாரத்தில் திஸ்ஸ விகாரை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். இன்று வரையும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் அமைச்சரவை குறிப்பை மீறி எதுவும் செய்யமுடியாது அமைச்சரவையின் குறிப்புக்கு அமைய அவர்கள் நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பத்தில் 60 நாட்களுக்கு பின் சபை தீர்மானத்தின் படி சட்டநடவடிக்கை எடுக்கலாம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் சைவ,கிறிஸ்தவ ஆலயங்கள் இடிக்கும் போது நல்லிணக்கம் பாதிக்கப்படவில்லையா சட்டவிரோத விகாரைக்கா நல்லிணக்கம் பாதிக்கப்படும் எனக் கேட்டார்.

- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன், கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பிரதேசத்தை சேர்ந்த 35 உறுப்பினர்களும் பங்குபற்ற முடியாது என்றால் அரச தரப்பு கௌரவ உறுப்பினர்கள்

பலர் எவ் அடிப்படையில் கலந்து கொண்டார்கள். நாங்கள் அவ்வாறு கலந்து கொள்ள முடியாது என்றால் வட்டார ரீதியான பிரச்சனைகளை நாங்கள் எவ்வாறு கதைப்பது எனவும் ஆனால் அடுத்த பிரதேசமட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் எங்கள் 35 உறுப்பினர்களையும் அழைக்காவிட்டால் கூட்டம் நடக்கும் போது அனைத்து உறுப்பினர்களும் அங்கு சென்று எதிர்ப்பு போராட்டம் செய்வோம் எனத் தெரிவித்தார்கள்.

- கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் அரச தரப்பு உறுப்பினர்கள் 3பேர் கிராமமட்ட அமைப்புகளில் இருப்பதால் அதன் மூலம் வந்த அழைப்பிதலுக்கமைய தான் கலந்துகொண்டார்கள் எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் தையிட்டி விகாரை சட்டவிரோதமான விகாரை என பிரதேச சபையால் அனுமதி பெறப்படாமல் கட்டப்பட்ட கட்டடமென பெயர் பலகை இடப்படல் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

- கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் காங்கேசன்துறை வீதியில் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்கு அப்பால் முன்னைய இராணுவ சோதனைச்சாவடி சுவர் ஒன்று உள்ளது அது வீதிக்கு இடைஞ்சலாக உள்ளதனால் அதனை இடித்து அகற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் அதனை சபை மூலம் தான் உடைத்து அகற்றப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சில வகுப்புகளை நடாத்துவது தொடர்பாகவும் தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்குவது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார். வகுப்புகள் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுவதனால் அறநெறிப்பாடசாலைகளை நடாத்துவது சிக்கலாக உள்ளது எனத் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் விரைவில் தனியார் கல்வி நிறுவனங்களை அழைத்து கலந்துரையாடல் ஒன்றினை நடாத்தி அதற்கான தீர்வினை பெற்றுக் கொள்வோம் எனத் தெரிவித்தார்.

➢ தெல்லிப்பளை உப அலுவலகம் மேல் மாடியில் இயங்கி வருவதனால் மாற்றுத்திறனாளிகள் செல்வதற்கு கடினமாக இருப்பதால் பன்னாலை வீதியில் உள்ள தனியார் வீட்டினை விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டிற்கமைய வாடகைக்குப் பெற்று இயங்க வைப்பதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 27/2025.08.20**

தெல்லிப்பளை உப அலுவலகத்தினை பன்னாலை வீதியில் உள்ள தனியார் வீட்டில் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டிற்கமைய வாடகைக்குப் பெற்று இயங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அடுத்து குழு அறிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

- *11.08.2025* ஆம் திகதி நடைபெற்ற தொழில்நுட்ப சேவைகள் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.
- ❖ வீதி புனரமைப்பின் போது மீதியாகக் கிடைக்கும் மூலப்பொருட்களை அருகிலுள்ள வீதியில் காணப்படும் சிறு திருத்தங்களை செய்யமுடியுமா என கேட்ட போது அனைத்து மூலப்பொருட்களும் கிடைக்காது என்பதால் சிறு திருத்தங்கள் செய்யமுடியாது என தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டது.
- ❖ தொழில்நுட்ப குழுவிலுள்ள அனைத்து உறுப்பினர்களும் அபிவிருத்தி வேலைகளை பார்வையிட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.
- ❖ தொழில்நுட்ப குழுவிற்குரிய கடமைகள் பொறுப்புக்களினை சபை கௌரவ தவிசாளரிடமிருந்து கோருவதென குழுத் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

- *13.08.2025* ஆம் திகதி நடைபெற்ற சுற்றாடலும் வாழ் வசதிகளும் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.
- ❖ கீரிமலை பிரதேசத்தில் ATM இயந்திரம் ஒன்றினை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- ❖ கழிவுகளை தரம்பிரித்து வழங்குவது தொடர்பாக பிரதேச சபை பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் பொதுமக்களிற்கு கூடிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்கள் கீரிமலையில் ATM பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அது தொடர்பாக வங்கிகளுக்கு கடிதம் அனுப்பப்படும் எனத் தெரிவித்தார் தொடர்ந்து கீரிமலை அம்மாச்சி உணவகத்தில் உணவு விற்பனையாளரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இத்துடன் கூட்டமானது மதியம் *12.20* மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

ஒப்பம்: ***சி.சிவானந்தன்***
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

ஒப்பம்: **சோ.சுகிர்தன்**
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

***சிவகுமாரன் சிவானந்தன்***
செயலாளர்.
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை